# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 69 — 1973 ජූලි 20 වැනි සිකුරාදා — 1973.07.20

69 ம் இலக்கம்—1973 ம் ஆண்டு யூலை மாதம் 20 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV — உள்ளூராட்சி


| | பக்கம் |
|---|---|
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் .. .. | 285 |
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் .. | 288 |
| துணை விதிகள் .. .. .. | 288 |
| உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. .. | — |
| வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. .. | — |
| வரவு செலவுத் திட்டங்கள் .. .. .. | — |
| ஆதன விற்பனைகள் .. .. .. | — |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் .. .. | — |
| நானாவித அறிவித்தல்கள் .. .. .. | 289 |


## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

### வீடமைப்பு, நகரச் சீர்திருத்தக் கட்டளைச்சட்டம்

(268 ஆம் அத்தியாயமான) வீடமைப்பு, நகரச் சீர்திருத்தக் கட்டளைச் சட்டத்தின் 2 ம் பிரிவின் கீழ் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் இடப்பட்ட கட்டளை.

பீலிக்ஸ். ஆர். டயஸ். பண்டாரநாயக்க,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி உள்நாட்டலுவல்கள்
அமைச்சர்.

கொழும்பு,
1973 ம் ௵ ஜூலை ௴ 07 ந் உ.

கட்டளை

மொனருகலை மாவட்டத்திலுள்ள தனமல்வில பெரும்பாக அரசிறை அலுவலரின் பிரிவிலிருக்கும் கதிர்காமக் கிராமப் பிரதேசத்தினுள்ளிருக்கும் உள்ளூரதிகாரசபை இக்கட்டளை கசெற்றில் பிரசுரிக்கபபடும் திகதி தொடக்கம் வீடமைப்பு நகரச் சீர்திருத்தக் கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களிற்கு அக்கிராமப் பிரதேசத்தின் கிராமச் சபையாக இருத்தல் வேண்டுமென இத்தால் பணிக்கப்படுகின்றது.

7–779—16.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 69

---

### வீடமைப்பு, நகராபிவிருத்திக் கட்டளைச்சட்டம்

1973.6.6 ஆம் திகதியன்று நடைபெற்ற ஒரு கூட்டத்தில் தேசிய அரசுப் பேரவையினால், நிறைவேற்றப்பட்ட பின்வரும் தீர்மானம் பொது மக்களின் தகவலுக்காகப் பிரசுரிக்கப்படுகிறது.

ஜீ. பீ. விக்கிரமநாயக்க,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ௵ ஜூலை ௴ 05 ந் உ.

தீர்மானம்

(268 ஆம் அத்தியாயமான) வீடமைப்பு, நகராபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 3 (ஆ) ஆம் பிரிவின் ஏற்பாட்டின் கீழ் இத்தேசிய அரசுப் பேரவை, முற்கூறப்பட்ட கட்டளைச் சட்டம் இதனோடுள்ள அட்டவணையில் வரையறை செய்யப்பட்டுள்ள ஒவ்வொரு பிரதேசத்துக்குள்ளும் 1973 யூன் முதலாந் திகதியிலிருந்து வலுவிலிருத்தல் வேண்டுமெனத் தீர்மானிக்கிறது.

அட்டவணை

**றணவன—மெதவலவீதி உட்பிரிவினை செய்யப்பட்ட பிரதேசம்**

மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்திலுள்ள ஹறிஸ்பற்றுவலின் கலுகம்மன்சியப்பற்றுக் கிராமப்பிரதேசத்திலுள்ள யட்டிவாவெல, றணவன, உடுவாவெல, பட்டியாவத்த, குன்னன் ஒய ஆகிய கிராமங்களில் அமைந்துள்ளதும் பின்வருமாறு எல்லைப்படுத்தப்பட்டதுமான பிரதேசத்தின் அந்தப்பகுதி அனைத்தும் :

வடக்கு : மெதவல—கட்டுகஸ்தோட்டை வீதியின் மத்திய கோட்டுக்குச் செங்குத்தாக ஹறிஸ்பற்று மெதசியப்பற்று கிராமப்பிரதேசத்தின் கிழக்கெல்லையிலுள்ள குன்னன் ஓய மத்திய கோடுவரை வரையப்பட்ட ஒரு கோட்டிலிருந்து 75 யார் தூரத்திலுள்ள ஓர் இடத்திலிருந்து கிழக்கு நோக்கியும் சொல்லப்பட்ட வீதியின் மத்திய கோட்டுக்குச் சமாந்தரமாகவும் 75 யார் தூரத்திலும் பிங்க ஓயவின் மத்திய கோட்டினைச் சந்திக்கும் வரை, அங்கிருந்து கிழக்கு நோக்கி சொல்லப்பட்ட பிங்கஓயவின் மத்திய கோட்டினேரமாக கண்டி மாநகரசபை எல்லைகளின் வட எல்லையைச் சந்திக்கும் வரை வரையப்பட்ட ஒரு கோட்டினால் ;

கிழக்கு : கடைசியாகக் கூறப்பட்ட இடத்திலிருந்து கண்டி மாநகர சபை எல்லைகளின் வட எல்லையோரமாக தென்மேற்கு நோக்கி சொல்லப்பட்ட வீதியின் மத்திய கோட்டுக்குச் செங்குத்தாக வரையப்பட்ட ஒரு கோட்டில் 75 யார் தூரத்திலுள்ள ஓரிடம் வரை வரையப்பட்ட ஒரு கோட்டினால் ;

தெற்கு : கடைசியாகக் கூறப்பட்ட இடத்திலிருந்து மேற்கு நோக்கி கடுகஸ்தோட்டை—மெதவல வீதியின் மத்திய கோட்டுக்குச் சமாந்தரமாகவும் 75 யார் தூரத்திலும் ஹறிஸ்பற்று மெதசியப்பற்றுக் கிராமப்பிரதேசத்தின் கிழக்கெல்லையிலுள்ள குன்னன் ஓயவின் மத்திய கோடுவரை வரையப்பட்ட ஒரு கோட்டினால்;

மேற்கு : கடைசியாகக் கூறப்பட்ட இடத்திலிருந்து வடக்கு நோக்கி ஹறிஸ்பற்று மெதவியப்பற்றுக் கிராமப்பிரதேசத்தின் கிழக்கெல்லையிலுள்ள குன்னன் ஓயவின் மத்திய கோட்டினேரமாக வட எல்லை ஆரம்பிக்கும் இடம்வரை வரையப்பட்ட ஒரு கோட்டினால்.

7–632—20.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 69

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும்**
**அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

**எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படும்.**

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
**அரசாங்க அழுத்தகர்.**

**அரசாங்க அச்சகத் திணைக்களம்,**
**கொழும்பு,**
**1972 ம் ௵ மே ௴ 5 ந் உ.**

### இறைச்சிக் கடைக்காரர்கள் கட்டளைச்சட்டம்

(272 ம் அத்தியாயமான) இறைச்சிக் கடைக்காரர்கள் கட்டளைச்சட்டத்தின் 27 ம் பிரிவின் கீழ் அதற்கான தக்க அதிகாரத் தாபனத்தால் அதாவது சுன்னாகம் பட்டண சபையினால் ஆக்கப்பட்டு அப்பிரிவினால் அவருக்குரித் தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள்கள் அமைச்சரால் உறுதிப்படுத்தப்பட்ட ஒழுங்கு விதிகள்.

ஜீ. பீ. விக்கிரமநாயக்க,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு யூலை மீ 06 ந உ.

### ஒழுங்குவிதிகள்

1. எவரும் எம் மிருகத்தையும்—

(அ) அம்மிருகம் சௌக்கிய வைத்திய உத்தியோகத்தரினால் பரிசோதிக்கப்பட்டு மனிதர் உண்பதற்காக அறுப்பதற்கு ஏற்றது என அங்கீகரிக்கப்பட்டாலன்றி ; அல்லது

(ஆ) இவ்வொழுங்குவிதியின் (அ) என்னும் பந்தியின் கீழ் அம் மிருகத்தை அறுப்பதற்கு அங்கீகரிக்கப்பட்ட நேரத்திலிருந்து 24 மணி நேரம் காலாவதியான பின்னர் எந்நேரத்திலும் ; அல்லது

(இ) எத்தினத்திலும் மு. ப. 9.00 மணிக்கும் மத்தியானம் 12.00 மணிக்குமிடையிலன்றி

எம்மிருகத்தையும் மிருகவறுப்புக்களத்தில் அறுக்கலாகாது.

ஆயினும், தலைவர், அவர் புறநடையானதெனக் கருதும் சந்தர்ப்பங்களில் பிற்பகல் 6 மணிக்கும் முற்பகல் 6 மணிக்குமிடையிலன்றி இதன்கண் குறிப்பிடப்பட்டுள்ள நேரமல்லாத வேறெந்த நேரத்திலும் எம்மிருகத்தையும் அறுப்பதற்கு அதிகாரமளிக்கலாம்.

2. (1) ம் ஒழுங்குவிதியின் கீழ் அறுப்பதற்கென அங்கீகரிக்கப்பட்ட பின்னர் மிருகவறுப்புக் களத்தின் வளவிலிருந்து உயிருடன் அப்புறப் படுத்தப்பட்டுள்ள மிருகம் எதையும் அது மீண்டும் அந்த ஒழுங்குவிதியின் கீழ் பரிசோதிக்கப்பட்டு மனிதர் உண்பதற்காக அறுக்கப்பட ஏற்றது என அங்கீகரிக்கப்பட்டாலன்றி எவரும் எம் மிருகத்தையும் மிருகவறுப்புக் களம் எதிலும் அறுக்கலாகாது.

3. (1) எம்மிருகமேனும் ஓராம் ஒழுங்குவிதியின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் அது நோயுற்றது என அல்லது மனிதர் உண்பதற்காக அறுக்கப்பட உகந்ததல்ல எனக் காணப்பட்டால் சௌக்கிய வைத்திய உத்தியோகத்தர், அது அறுக்கப்படுவதைத் தடைசெய்யலாம்.

(2) இந்த ஒழுங்குவிதியின் கீழ் அறுக்கப்படுவதற்குத் தடைசெய்யப் பட்ட மிருகமெதையும் எந்த ஆளும் அறுக்கலாகாது.

4. மிருகவறுப்புக்களத்தின் வளவுக்குள் மிருகமெதையும் கொண்டு வரும் ஒவ்வொருவரும் அம்மிருகம் அவ்வளவுக்குள் இருக்கையில் அம் மிருகத்திற்குப் போதிய அளவு தீனியும் தண்ணீரும் கிடைக்கச் செய்வதை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான சகல நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும்.

5. மிருகவறுப்புக்களத்தின் வளவுக்குள் மிருகமொன்றை கொண்டு வரும் ஒவ்வொருவரும் அம்மிருகம் அறுக்கப்பட உகந்ததல்ல என நிராகரிக்கப்பட்டால் அப்படி நிராகரிக்கப்பட்ட உடனே, அம்மிருகத்தை அவ்வளவை விட்டு அகற்ற வேண்டும் அல்லது அகற்றப்படச் செய்ய வேண்டும்.

6. மிருகவறுப்புக்களத்தில் அறுக்கப்பட்ட எம்மிருகத்தினதும் சடலம் அல்லது கழிவிறைச்சி நோயுற்றது, அல்லது மனிதர் உண்பதற்கு உகந்ததல்லவென சௌக்கிய வைத்திய உத்தியோகத்தரும் அபிப்பிராயப்பட்டால், அவர் அச்சடலத்தையும் அல்லது கழிவிறைச்சி உடனடியாக அழித்தொழிக்கப்பட அல்லது அச்சடலம் அல்லது அக்கழிவிறைச்சி விற்பனைக்காக வெளியில் வைக்கப்படாமல் அல்லது மனிதர் உண்பதற்காக உபயோகிக்கப்படாமல் இருக்கத் தக்க வகையில் அது அகற்றப் படச் செய்யவேண்டும். சௌக்கிய வைத்திய உத்தியோகத்தரின் பணிப்புரையின் கீழன்றி அத்தகைய சடலத்தை அல்லது கழிவிறைச்சியை மிருகவறுப்புக்களத்திலிருந்து எவரும் எடுத்துச் செல்லலாகாது.

7. 1 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் மனிதர் உண்பதற்கு உகந்தது என அங்கீகரிக்கப்படாத அல்லது 3 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் அறுப் பதற்குத் தடைசெய்யப்பட்டிருக்கும் எம்மிருகங்களையும் அறுப்பதற்கு அறுப்புக்களக் காப்பாளர் அனுமதிக்கலாகாது.

8. மனிதர் உண்பதற்கெனக் கருதப்பட்ட எம்மிருகத்தின் சடலத்தையேனும் அறுப்புக் காப்பாளரினால் " சு.ப.ச " என்னும் எழுத்துக்களால் அச்சடலத்தின் முன்னங்கால் பாகத்திலும் பின்னங்கால் பாகத்திலும் முத்திரையிடப்பட்டாலன்றி அதை அறுப்புக்களத்திலிருந்து எவரும் வெளியே கொண்டுபோதலாகாது.

9. எம்மிருகம், வேறெந்த மிருகத்தின் முன்னிலையில் அல்லது முன்னர் அவ்வளவில் அறுக்கப்பட்ட ஒவ்வொரு மிருகத்தின் சடலமும் அவ்வளவிலிருந்து அகற்றப்பட்டு அல்லது அறுக்கப்படவிருக்கும் மிருகத்தின் பார்வையிலிருந்து மறைக்கப்பட்டு முன்னைய அத்தகைய மிருகவறுப்பின் அடையாளங்களை அகற்றும்படியாக அவ்வளவு சுத்தம் செய்யப்படும் வரைக்கும், அறுக்கப்படலாகாது.

10. தொற்றுநோய், ஒட்டுநோய், சருமநோய் எதனாலும் பீடிக்கப்பட்டிருக்கும் அல்லது அண்மையில் பீடிக்கப்பட்டிருந்த அல்லது அத்தகைய நோயினால் பீடிக்கப்பட்ட யாரேனும் ஒருவருக்கு அண்மையில் பணிவிடை செய்த எந்த ஆளும் அவரைப் பீடித்திருக்கும் அல்லது பீடித்திருந்த அல்லது அவர் தொடர்பு கொண்ட நோய் தொற்றுங் காலமும் நோய்க்கிருமிகள் பெருகுங் காலமும் முடியும் வரைக்கும் மிருகங்களறுப்புக்களத்துக்குள் பிரவேசிப்பதை அல்லது மிருகமெதையும் அறுப்பதில் பங்கெடுத்துக்கொள்வதை மிருகவறுப்புக் களத்திற்குப் பொறுப்பாகவுள்ள ஆள் அனுமதிக்கலாகாது.

11. நியாயமான காலங்கள் அனைத்திலும் மிருகவறுப்புக்களம் எதனுள்ளும் பிரவேசித்து பரிசோதனை செய்வது சௌக்கிய வைத்திய உத்தியோகத்தருக்குச் சட்டமுறையாதல் வேண்டுமென்பதுடன் அதற்குப் பொறுப்பாகவுள்ள ஆள் அன்னாருக்குத் தேவைப்படக்கூடிய சகல உதவிகளைச் செய்யவும் வேண்டும்.

12. சபையினால் நிறுவப்பட்டுள்ள மிருகவறுப்புக்களம் எதனையும் உபயோகிப்பதற்குப் பின்வரும் விகிதங்களிலான கட்டணமொன்று, சபைக்கு முற்பணமாகச் செலுத்தப்படவேண்டுமென்பதுடன் உரிய கட்டணம் செலுத்தியமைக்குச் சான்றாக உத்தியோகபூர்வமான பற்றுச்சீட்டு ஒன்றில்லாமல் மிருகமெதுவும் அறுக்கப்படலாகாது.

| | ரூ. | ச. |
|---|---|---|
| மாடுகள் தலைக்கு .. .. | 2 | 0 |
| செம்மறியாடுகள் அல்லது வெள்ளாடுகள் தலைக்கு | 1 | 0 |

13. அறுப்புக்களம் ஒவ்வொன்றினதும் காப்பாளர் அறுப்புக்களத்தில் அறுக்கப்பட்ட ஒவ்வொரு மிருகம் சம்பந்தமான விபரங்களைக் கொண்டு ஒரு பதிவேட்டைச் சபை பணிக்கக்கூடிய படிவத்தில் வைத்திருக்க வேண்டும்.

14. சௌக்கிய வைத்திய உத்தியோகத்தருக்கு இந்த ஒழுங்குவிதிகளினால் வழங்கப்பட்டிருக்கும் தத்துவங்கள், அத்தகைய சௌக்கிய வைத்திய உத்தியோகத்தரின் பொது அல்லது விசேட பணிப்புரையின் கீழ் பதிற் கடமையாற்றும் எந்த உத்தியோகத்தரினாலும் பிரயோகிக்கப்படலாம்.

15. இவ்வொழுங்குவிதிகளில்—

" தலைவர் " என்பது சபைத் தலைவர் எனப் பொருள்படும் ; அத்துடன் " சபை " என்பது சுன்னாகம் பட்டண சபை எனப் பொருள்படும்.

7–740—20.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 69

## மின்சக்திச் சட்டம்

1957 ம் ஆண்டின் 59 ம் இலக்கச் சட்டத்தாற் திருத்தப்பட்டபடியான (205 ம் அத்தியாயமாம்) மின்சக்தி பற்றிய சட்டத்தின 46 ம் பிரிவின் கீழும், நீர்ப்பாசன, மின்சக்தி, பெருந்தெருக்கள் அமைச்சரைக் கலந்தாலோசித்த பின்னர் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் அளித்த அங்கீகாரத்துடனும் கண்டி மாவட்டத்து தும்பனே உடப்பலாத்த கிழக்குக் கிராமச்சபையால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

ஜி. பீ. விக்கிரமநாயக்க,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு ஜூலை மீ 10 ந உ.

### ஒழுங்கு விதிகள்

1. இவ்வொழுங்கு விதிகளில்—

" சட்டம் " எனில் 1957 ம் ஆண்டின் 59 ம் இலக்கச் சட்டத்தாற் திருத்தப்பட்டபடியான (205 ம் அத்தியாயமாம்) மின்சக்திச் சட்டம் எனப் பொருள்படும்.

" உத்தரவுப்பத்திரம் " எனில் சட்டத்தின் 2 ம் பிரிவின் கீழ் கண்டி மாவட்டத்து தும்பனே உடப்பலாத்த கிழக்குக் கிராமச்சபைக்கு வழங்கப்பட்ட உத்தரவுப்பத்திரம் எனப்பொருள்படும்.

" உத்தரவுப்பத்திரக்காரர் " எனில் கண்டி மாவட்டத்து தும்பனே உடபலாத்த கிழக்குக் கிராமச்சபை எனப் பொருள்படும்.

2. உத்தரவுப்பத்திரக்காரரிடமிருந்து மின்சக்தி பெறவிரும்பும் எவரும்—

(1) விநியோகம் தேவைப்படுவதற்குக் குறைந்தது பதினான்கு நாட்களுக்கு முன்னராவது உத்தரவுப்பத்திரக்காரர் அதற்கென வழங்கும் படிவத்தில் உத்தரவுப்பத்திரக்காரருக்கு விண்ணப்பஞ் செய்ய வேண்டும் ; மேலும்

(2) வழங்கு கம்பிகளுக்கான செலவுகளை உத்தரவுப்பத்திரக்காரருக்கு முற்பணமாகச் செலுத்த வேண்டும், அல்லது உத்தரவுப் பத்திரதாரர் அவ்விதங் கேட்டால், சட்டத்தின் 33 ம் பிரிவின் கீழ் உத்தரவுப் பத்திரதாரருடன் எழுத்திலான ஒரு ஒப்பந்தமும் செய்தல் வேண்டும்.

(3) (அ) உத்தரவுப்பத்திரக்காரரின் மின்சக்தி வழங்கு மூலக்கம்பிகளுடன் இணைக்கக் கருதியுள்ள நிறுப்பு எதனதும் கம்பியிடும் வேலையை மின்னேந்திரவியற் பொறியியலாளர் கழகத்தினால் விதிக்கப்பட்ட கம்பியிடுதல் பற்றிய ஒழுங்குவிதிகளுக்கமைய அவ்வேலையைச் செய்து முடிக்கக்கூடிய திறமையுள்ள ஒரு தொழிற்றாபனத்திடம் அல்லது தனியார் ஒருவரிடம் பாவனையாளர் ஒப்படைத்தல் வேண்டும். அவ்வேலையை உத்தரவுப்பத்திரக்காரரினால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தர் பரிசோதித்து, பரீட்சித்துப்பார்த்த பின்னரும், அவ்வேலை முன்னே சொல்லப்பட்ட கம்பியிடுதல்பற்றிய ஒழுங்கு விதிகளுக்கமைவாகச் செய்யப்பட்டுள்ளதென உத்தரவுப்பத்திரகாரர் திருப்தியடைந்த பின்னரும் மாத்திரமே அந்நிறுப்புக்கு மின்சக்தி விநியோகம் இணைக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) அந்நிறுப்பு சொல்லப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளுக்கமைவாக இல்லாவிட்டால் அந்நிறுப்பு அவ்வொழுங்கு விதிகளுக்கமைய அமைக்கப்படும்வரையில் அம்மனையகத்துக்கு மின்சக்தி விநியோகம் செயயப்படமாட்டாது.

4. மின்சக்தி உபயோகிக்கும் ஒவ்வொருவரும் அம்மின்சக்திக்காக உத்தரவுப்பத்திரத்தில் விவரிக்கப்பட்ட விகிதத்தில பணம் செலுத்த வேண்டும்.

5. (அ) பாவனையாளரின் மனையகத்தில் இருக்கும் சேவைவடக்கம்பிகளின் பாகமும் அம்மின்மாற்றியும், பிரதான பியூஸ்களும், மானியும் தாங்கு பலகையும் உத்தரவுப்பததிரக்காரரின் சொத்துக்களாகவே இருக்கும். எக்காரணத்தைக் கொண்டும் உத்தரவுப்பத்திரக்காரரினால் அதிகாரமளிக்கப்பட்ட அவரது ஊழியரல்லாத எவரும் அவற்றை அகற்றவோ அல்லது தலையிடவோ கூடாது.

(ஆ) பாவனையாளரின் புறத்தில் இருக்கும் உத்தரவுப்பத்திரக்காரரின் பிரதான பியூஸ், மானி அகியவற்றின் கம்பிக்ள், வடக்கம்பிகளையும் வேறு உபகரணங்களையும் பராமரிப்பது பாவனையாளரின் பொறுப்பாகும்.

(இ) சட்டத்தின் 47 (3) ம் பிரிவின்படி துண்டிக்கப்பட்ட நிறுப்பு எதும் மீண்டும் இணைக்கப்பட்டால், அந்நிறுப்பை பரிசோதித்து மீண்டும் இணைப்பதற்குரிய சலார், உத்தரவுப்பத்திரத்தில் எற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு அறவிடப்படும். அதனைப் பாவனையாளர் முற்பணமாகச் செலுத்திவிட வேண்டும்.

(ஈ) எப்பாவனையாளரதும் கம்பிகளின் அல்லது பொருத்துகளின் சில பாகங்களின் ஒழுக்கு இருக்கும் பட்சத்தில், தமது மனையகத்தின் மானிகாட்டும் சக்திச் செலவு யாவற்றுக்கும் மின்சக்திச் சட்டத்தின் 41 ம் பிரிவிற்கிணங்க அவர் பணஞ் செலுத்தப் பாத்திரராவார்.

6. (அ) தமது மனையகத்துக்கு மின்சக்தி வழங்கப்பட்ட பின்னர், ஏற்கனவே உபயோகித்துவந்ததைவிடப் பெரிய அளவான எந்த விளக்கையும் விசிறியையும் அல்லது மோத்தரையும் உபயோகித்த அல்லது மேலதிகமாக விளக்கெதயையும் அல்லது மின்சக்தியைச் செலவிடும் உபகரணம் எதையும் தற்காலிகமாகவோ அல்லத் நிரந்தரமாகவோ பொருத்தவோ அல்லது தமது மனையகத்தில் பொருத்தப்பட்டுள்ள கம்பிகளை மாற்றவோ அல்லது விஸ்தரிக்கவோ விரும்பும் பாவனையாளர் ஒவ்வொருவரும், அப்படியான வேலை ஆரம்பிப்பதற்குக் குறைந்தது இரண்டு நாட்களுக்கு முன்னராவது உத்தரவுப்பத்திரக்காரருக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.

(ஆ) முன்பிருந்ததைவிடப் பெரிய விஸ்தரிப்பு, விளக்கு, விசிறி அல்லது மோத்தர் எதனையும் அல்லது மேலதிக விளக்கு அல்லதி சக்தியைச் செலவிடும் வேறு உபகரணம் எதையும் அவ்வித விஸ்தரிப்பு, விளக்கு விசிறி, மோத்தர், மேலதிக விளக்கு அல்லது வேறு உபகரணத்தை உத்தரவுப்பத்திரக்காரரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரு ஒருவர் பாரவையிட்டுச் சோதித்துத் திருப்திப்படாதவரையில் எப்பாவனையாளரும், தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவேனும் பிரதான நிறுப்புடன் இணைக்கவோ இணைக்கச் செய்யவோ அல்லது நிறுவவோ கூடாது.

7. (அ) எவ்வீட்டிலும் உத்தரவுப்பத்திரக்காரரின் பியூஸ் உருகிப் போகும் பட்சத்தில் பாவனையாளர் உடனடியாக உத்தரவுப்பத்திரக்காரருடைய விசைநிலைய அல்லது சகவிசை நிலைய, அவ்வதற்கேற்றவாறு பொறுப்பாளருக்கு அறிவிக்க வேண்டும்.

(ஆ) உத்தரவுப்பத்திரக்காரரால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தர் அல்லது வேலையாள் எவரையும் தவிர்ந்த வேறெவரும் உத்தரவுப்பத்திரக்காரரின் சொத்தான உருகிப்போன பியூசை மாற்றக் கூடாது.

(இ) பாவனையாளருக்கு அல்லது உத்தரவுப்பத்திரக்காரருக்கு சொந்தமான பியூஸ் எதனையும் மாற்றுவதற்காக உத்தரவுப்பத்திரக்காரருடைய உத்தியோகத்தர் அல்லது வேலையாள் எவரதும் உதவி அவசியப்பட்டால் உத்தரவுப்பத்திரத்தில் சொல்லப்பட்டவாறான கட்டணம் ஒன்று பாவனையாளரின் அந்த மாதக் கணக்கில் சேர்க்கப்படும்.

8. வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏற்படும் முழு அல்லது பகுதி சக்தி விநியோகத்தடைப்பாட்டினால் உண்டாகும் நஷ்டம் அல்லது சேதம் எதற்கும் உத்தரவுப்பத்திரக்காரர் பாவனையாளருக்குப் பொறுப்பாளியாக்மாட்டார்.

9. சட்டத்தின் 45 ம் பிரிவின்படிக்குத் துணிக்கப்பட்டிருந்தபின் ஒரு நிறுப்பு மீண்டும் இணைக்கப்படுமாயின், சோதித்து மீளவும் இணைப்பதற்காக உத்தரவுப்பத்திரத்தில் சொல்லப்பட்டவாறான ஒரு கட்டணத்தை பாவனையாளர் முற்பணமாகக் கொடுத்துவிடவேண்டும்.

10. (அ) கணக்குக் கொடுக்கப்பட்ட திகதியன்றே சகல கட்டணங்களும் கொடுபடவேண்டியனவாகக் கருதப்படும்.

(ஆ) ஒரு கணக்கில் பிழையிருப்பதாகச் செய்யப்படும் முறைப்பாடு எதுவும் பாவனையாளருக்குக் கணக்குக கொடுக்கப்பட்ட ஒரு கிழமைக்குள் செய்யப்பட்டாவிட்டால் உத்தரவுப்பத்திரக்காரர் அதனை ஏற்கமாட்டார்.

11. (அ) தனது வீட்டுக்கு மின்சக்தி விநியோகம் தேவைப்படாத பாவனையாளர் ஒவ்வொருவரும் உத்தரவுப்பத்திரக்காரருக்கு எழுத்தில் மூன்று முழு நாளைய அறிவித்தல் கொடுக்க வேண்டும்.

(ஆ), (அ) ம் பந்தியில் குறிப்பிடப்பட்ட அறிவித்தல் கொடுக்கப்படாதவிடத்து தனது வீட்டிலுள்ள உத்த்தரவுப்பத்திரக்காரரின் உபகரணங்களுக்குப் பாவனையாளர் பொறுப்பாளியாக இருப்பதுடன், பாவனையாளருக்கு அவ்விநியோகம் தேவையில்லையென உத்தரவுப்பத்திரக்காரருக்கு அறிவித்தல் கிடைத்த தினத்திலிருந்து மூன்று நாட்களுக்கு அவ்வீட்டில் செலவாகிய சக்தி முழுவதற்கும் பணஞ் செலுத்துதற்குப் பொறுப்பாளியாக இருப்பார். எனினும், சொல்லப்பட்ட மூன்று நாட்கள் கடக்கு முன்னர் உத்தரவுப் பத்திரக்காரரால் விநியோகம் துணிக்கப்பட்டால் துணிக்கப்பட்ட நேரம் வரைக்கும் அவ்வீட்டில் செலவான மின்சக்திக்கு மாத்திரமே பாவனையாளர் பணம் செலுத்தப் பாத்திரராவார்.

12. இருந்து வரும் இணைப்புகளுக்கு சேர்த்தல், மாற்றுதல், செம்மைப் படுத்தல் உடபட்ட மின்சார இணைப்புவேலை எதனையும் தொடங்குதற்கு இரண்டு நாட்களுக்குக் குறையாத அறிவித்தல் ஒன்றை உத்தரவுப் பத்திரக்காரருக்குக் கொடுத்து உத்தரவுப்பத்திரக்காரரின் ஒரு உத்தியோகத்தர் உத்தேச வேலையைப் பரிசோதிக்க வாய்ப்பளிக்காது தொடங்கக்கூடாது.

13. உத்தரவுப்பத்திரக்காரருக்கு அறிவித்தல் கொடுத்து அவரது முன்னங்கீகாரத்தைப் பெறாது எம்மனையகத்திலும் புதிய இணைப்பு எதற்கும் மின்சார வேலை செய்யப்படின் உத்தரவுப்பத்திரக்காரருக்கு முறைப்படியான அறிவித்தல் கிடைத்து அவசியமான பரிசோதனைகள் செய்யப்படுகின்றவரை, அத்தகைய வேலை செய்யப்பட்டுள்ள மனையகத்துக்கு மின்சக்தி வழங்குதற்கு உத்தரவுபபத்திரக்காரர் மறுக்கலாம்.

14. உத்தரவுப்பத்திரக்காரரின் மின்சார விநியோக மூலக்கம்பிகளோடு ஏறகனவே இணைக்கப்பட்டுள்ள நிறுப்பு எதற்கும், உத்தரவுப் பத்திரக்காரருக்கு முன்னறிவித்தல் கொடுத்து அனுமதிபெறாமல் விஸ்தரிப்பு ஏதும் செய்யும் பட்சத்தில் அந்நிறுப்பு முற்றாக உத்தரவுப் பத்திரக்காரருடைய மின்சார விநியோக மூலக்கம்பிகளிலிருந்து துண்டிக்கப்படப்பாத்திரமானதாகும்.

15. எந்த நிறுப்பையும் மீண்டும் இணைப்பதற்காக விண்ணப்பம் ஒவ்வொன்றும் உத்தரவுப்பத்திரக்காரர் அதற்கென வைத்துள்ள படிவத்தில் செய்யப்பட்டு மின்சக்தி தேவைப்படுவதற்கு நாற்பத்தெட்டு மணித்தியாலங்களுக்குக் குறையாத காலத்துள் உத்தரவுப்பத்திரக்காரரின் காரியாலயத்தில் கொடுக்கப்பட வேண்டும்.

7–832—20.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 69

---

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**கீழ்த்தர சுருக்கெழுத்தாளருக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை, 18.11.72**

மேற்படி பதவியின் முடிவுகள் கீழ்த்தரப்படுகின்றன :—

**முதலாவது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை (ஆங்கிலம்) :**

திரு. ஏ. டி. எஸ். நந்தசேன சித்தியடைந்தார்.

**இரண்டாவது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை (ஆங்கிலம்)**

திரு. இஸட். நாகூர் (1) சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும்.

எட்கா பர்ணந்து,
செயலாளர்,
உ. ஆ. சே. அ. சபை.

த. பெ. 530,
கொழும்பு 1, 1973 ந் ஆண்டு ஜுலை மீ 6 ந உ.

7–592—20.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 69

---

# துணைவிதிகள்

**கிராமச்சபைகள் கட்டளைச்சட்டம்**

(257 ஆம் அத்தியாயமான) கிராமச்சபைகள் கட்டளைச்சட்டத்தின் 42 ஆம் பிரிவின் கீழ் இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள குருவிற்றி கோறளை பல்லேபற்றுக் கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையினால் ஆக்கப்பட்டு அப்பிரிவினால் தமக்குரித்தாககப்பட்ட தத்துவங்களைககொண்டு அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி.

ஜீ. பீ. விக்கிரமநாயக்க,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு ஜுலை மீ 10 ந உ.

துணைவிதி

1. சந்தைகள், முறைச்சந்தைகள் சம்பந்தமாக இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள குருவிற்றி கோறளை பல்லேபற்றுக் கிராமப் பிரதேசத்துக் கிராமச்சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமத்துணைவிதிகளின் 27 ஆம் பாகத்தின் 1 ஆம் துணைவிதியின் நோக்கத்துக்கு கெற்றஹெற்றச் சந்தைக்கான சந்தைப்பிரதேசம் அச்சந்தையிலிருந்து ஒரு மைல் ஆரையைக் கொண்ட வட்டத்துக்குள் உள்ள பிரதேசமாதல் வேண்டும்.

2. கெற்றஹெற்றச் சந்தையிலுள்ள இடம் அல்லது கடை எதையும் உபயோகிப்பதற்கு அல்லது ஆட்சி செலுத்துவதற்குப் பின்வரும் விகிதங்களிலான கட்டணமொன்று அறவிடப்பட்டுச் செலுத்தப்படவேண்டும் :

| | நாளொன்றுக்கு ரூ. ச. |
|---|---|
| (1) ஒவ்வொரு கடைக்கும் .. .. .. | 1 50 |
| (2) 4 சதுர அடிக்கு மேற்படாத தரை இடக்கூறு ஒவ்வொன்றுக்கும் .. .. .. | 0 20 |
| (3) 4 சதுர அடிக்கு மேற்பட் ஆனால் 20 சதுரஅடிக்கு மேற்படாத இடக்கூறு ஒவ்வொன்றுக்குக் .. .. | 0 40 |
| (4) 20 சதுர அடிக்கு மேற்பட ஆனால் 30 சதுரஅடிக்கு மேற்படாத இடக்கூறு ஒவ்வொன்றுக்கும் .. | 0 75 |
| (5) 30 சதுர அடிக்கு மேற்பட ஆனால் 50 சதுர அடிக்கு மேற்படாத இடக்கூறு ஒவ்வொனறுக்கும் .. | 1 50 |
| (6) 50 சதுர அடிக்கு மேற்பட ஆனால் 100 சதுர அடிக்கு மேற்படாத இடக்கூறு ஒவ்வொன்றுக்கும் .. | 2 50 |

3. சந்தைப் பிரதேசத்திலுள்ள இடமெதையும் உபயோகிப்பதற்கு அல்லது ஆட்சி செலுத்துவதற்குப் பினவரும் விகிதங்களிலான கட்டணமொன்று அறவிடப்பட்டுச் செலுத்தப்படவேண்டும் :

| | நாளொன்றுக்கு ரூ. ச. |
|---|---|
| (அ) 10 சதுர அடிக்கு மேற்படாத தரை இடக்கூறு ஒவ்வொன்றுக்கும் .. .. | 0 30 |
| (ஆ) 10 சதுர அடிக்கு மேற்பட ஆனால் 25 சதுர அடிக்கு மேற்படாத தரை இடக்கூறு ஒவ்வொன்றுக்கும் | 0 50 |
| (இ) 25 சதுர அடிக்கு மேற்பட ஆனால் 50 சதுர அடிக்கு மேற்படாத தரை இடக்கூறு ஒவ்வொன்றுக்கும் | 0 80 |
| (ஈ) 50 சதுர அடிக்கு மேற்பட ஆனால் 100 சதுர அடிக்கு மேற்படாத தரை இடக்கூறு ஒவ்வொன்றுக்கும் | 1 00 |

4. பொருட்களை விற்பனை செய்யும், கொள்வனவு செய்யும், ஏற்றும் அல்லது இறக்கும் நோக்கங்களுக்கு சந்தைப்பிரதேசத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருக்கும் வாகனங்களுக்காகப் பின்வரும் விகிதங்களிலான கட்டணமொன்று அறவிடப்பட்டுச் செலுத்தப்படவேண்டும்.

| | நாளொன்றுக்கு ரூ. ச. |
|---|---|
| ஒரு லொறியிடமிருந்து .. .. | 1 50 |
| ஒரு வானிடமிருந்து .. .. | 1 00 |
| ஒரு இரட்டைமாட்டுவண்டியிடமிருந்து .. | 0 75 |
| ஒரு ஒற்றைமாட்டு வண்டியிடமிருந்து .. | 0 50 |

5. வர்த்தகப்பிரச்சார வேலை எதற்காகவும் சந்தைப்பிரதேசத்துக்குள் வருகின்ற லொறி, வான் அல்லது வேறு வாகனம் எதற்கும் ரூபா 1 ஐக் கொண்ட கட்டணமொன்று அறவிடப்பட்டுச் செலுத்தப்படவேண்டும்.

7–833—20.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 69

எச்.டி.—பி.23/65.

**கிராமச்சபைகள் கட்டளைச் சட்டம்**

(257 ஆம் அத்தியாயமான) கிராமச்சபைகள் கட்டளைச் சட்டத்தின் 42 ஆம் பிரிவின் கீழ் பதுளை மாவட்டத்திலுள்ள கெப்பெற்றிப்பொலைக் கிராமச் சபையினால் ஆக்கப்பட்டு அப்பிரிவினால் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி.

ஜீ. பீ. விக்கிரமநாயக்க,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு, 1973 ந் ஆண்டு ஜூலை மீ 07 ந உ.

**துணைவிதி**

நீர் வழங்கல் சம்பந்தமாக 1953 எப்பிறல் 10 ஆந் தேதிய 10,517 ஆம் இலக்கக் கசெற்றில் வெளியிடப்பட்டனவும் (261 ஆம் அத்தியாயமான) உள்ளூராட்சி அதிகாரசபைகள் (நியமத் துணைவிதிகள்) சட்டத்தின் கீழ் 1953 திசெம்பர் 23 ஆந் தேதிய 10,625 ஆம் இலக்கக் கசெற்றில் வெளியிடப்பட்ட தீர்மானத்தின் வாயிலாக பதுளை மாவட்டத்திலுள்ள உடபத்த கிராமச் சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டவையுமான நியமத் துணைவிதிகளின் தொகுதியின் **XXVIII** ஆம் பாகம், அந்தப் பாகமானது மேற்சொல்லப்பட்ட கிராமச்சபைக்கு ஏற்புடைத்தாகும் அந்த அளவுக்கு அதன் 16 (1) ஆம் துணைவிதியில் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது :—

"(இ) சபையின் நீர்க் குழாய் எதிலுமிருந்து தனிப்பட்ட உபயோகத்திற்காக நீர் இணைப்பொன்றை முறையாகப் பெறும் எவ்வளவினதும் உடைமையாளர் அல்லது குடியிருப்பவர் அத்தகைய நீர் வடிகுழாய் ஒவ்வொன்றுக்கும், விசேட தண்ணீர் வரியொன்று அறவிடப்படும் பிரதேசம் சம்பந்தமாக ஆண்டொன்றுக்கு 5.00 ரூபா கட்டணத்தையும், விசேட தண்ணீர் வரியொன்று அறவிடப்படாத பிரதேசம் சம்பந்தமாக ஆண்டொன்றுக்கு 10.00 ரூபா கட்டணத்தையும் சபைக்குச் செலுத்துதல் வேண்டும்."

7–780—20.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 69

---

# நானாவித அறிவித்தல்கள்

**1952 ன் 6 ம் இலக்கம் உள்ளூராட்சிச் சபைகள்**
**(நியமத் துணைவிதிகள்) சட்டம்**

(261 ம் அத்தியாயமான) உள்ளூராட்சிச் சபைகள் (நியமத் துணைவிதிகள்) சட்டத்தின் 3 ம் பிரிவின் கீழ் யாழ்ப்பாண மாவடத்திலுள்ள கைதடி கிராமப் பிரதேசத்தின் கிராமச்சபையால் நிறைவேற்றப்பட்ட பின்வரும் தீர்மானம் அப் பிரிவின் தாற்பரியப்படி பிரசுரிக்கப்படுகின்றது.

**தீர்மானம்**

(216 ம் அத்தியாயமான) உள்ளூராட்சி சபைகள் (நிமயத் துணை விதிகள்) சட்டத்தின் 3 ம் பிரிவின (1)ம் உட்பிரிவின் கீழ் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள கைதடிக் கிராம பிரதேசத்தின கைதடிக் கிராமச் சபை இத் தீர்மானம் கசெற்றில பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து—

உள்ளூராட்சி அமைச்சரால் ஆக்கப்பட்டு 1953 எப்ரல் 10 ம் திகதிய 10,517 ம் இலக்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்டவையும் மூதவையாலும் சனப் பிரதிநிதிகள் சபையாலும் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தால் அங்கீகரிக்கப்பட்டவையென 1953, ஒகஸ்ட் 07 ம் திகதிய 10,560 ம் இலக்க கசெற் அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டவையுமான நியமத் துணை விதிகளின் 1–37 பாகங்களையும்,

1963 யூன் 21 ந் திகதிய 13,679 ம் இலக்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்டதும், மூதவையாலும் சனப் பிரதிநிதிகள் சபையாலும் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தால் அங்கீகரிக்கப்பட்டவையென 1965, ஜனவரி 08 ம் திகதிய 14,287 ம் இலக்க கசெற் அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டதுமான அதே நியமத் துணைவிதிகளின் 38 ம் பாகத்தையும்,

உள்ளூராட்சி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 1966 யூலை 08 ம் திகதிய 14,703 ம் இலக்க கசெறறில் பிரசுரிக்கப்பட்டவையும் மூதவையாலும் சனப் பிரதிநிதிகள் சபையாலும் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தால் அங்கீகரிக்கப்பட்டவையென 1969, ஜனவரி 03 ம் திகதிய 14,835 ம் இலக்க கசெற் அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டதுமான அதே நியமத் துணைவிதிகளின் 39, 40, 41 ஆகிய பாகங்களையும் ஏற்றுக் கொள்வதென இத்தால் தீர்மானிக்கிறது.

இ. செல்லையா,
தலைவர்,
கிராமசபை, கைதடி.

கிராமசபை அலுவலகம்,
கைதடி,
1972 ம் ஆண்டு புரட்டாதி மீ 29 ந உ.

7–636—20.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 69

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

**முக்கிய கவனிப்பு.**— குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

**அட்டவணை 1973**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| யூலை | 6.7.73 | வெள்ளி | 29.6.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 13.7.73 | வெள்ளி | 6.7.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 20.7.73 | வெள்ளி | 13.7.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 27.7.73 | வெள்ளி | 20.7.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| ஓகத்து | 3.8.73 | வெள்ளி | 27.7.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 10.8.73 | வெள்ளி | 3.8.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 17.8.73 | வெள்ளி | 10.8.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 24.8.73 | வெள்ளி | 17.8.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 31.8.73 | வெள்ளி | 24.8.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| செத்தெம்பர் | 7.9.73 | வெள்ளி | 31.8.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 14.9.73 | வெள்ளி | 7.9.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 21.9.73 | வெள்ளி | 14.9.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 28.9.73 | வெள்ளி | 21.9.73 | வெள்ளி | ந.ப. 12.00 |

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு ஓகத்து மீ 18 ந் உ.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.